بسم الله الرحمن الرحيم

# ITHTHIHADUL MUSLIMEEN

ඉත්තිහාදුල් මුස්ලිමීන් இத்திஹாதுல் முஸ்லிமீன்

---


Jumaa masjid,
97, Chatham Street,
Fort, Colombo-1.


15th Dec., 1983.

Dear Brother-in-Islam,

وَتَعَاوَنُوا عَلَى الْبِرِّ وَالتَّقْوَىٰ وَلَا تَعَاوَنُوا عَلَى الْإِثْمِ وَالْعُدْوَانِ وَاتَّقُوا اللَّهَ

"Help ye one another unto righteousness and pious duty,
Help not one another unto Sin and Transgression,
But keep your duty to Allah" (Al-Qur-an)

We are pleased to inform you that we have formed an association called 'ITHTHIHADUL MUSLIMEEN'. The aims and objects of the association are:-

1. Seeking ways and means of eliminating divisions among the Muslims,
2. To improve the conditions of the Muslims in all aspects of life,
3. To foster inter-communal amity,
4. To formulate and implement policies that may be necessary or conducive for the attainment of the above objects.

ITHTHIHADUL MUSLIMEEN calls for a spiritual re-awakening among the Muslims of Sri Lanka.

By organizing meetings in Mosques with Khathoebs and Trustees, we hope to brief the Muslim Ummath how to mould themselves as good Muslims, strengthen Thaqwa and infuse a sense of unity among the Muslim Ummath and other communities in order to promote national harmony.

We shall endeavour to educate the Muslim Ummath to practice patience, justice and tolerance in their dealings with other citizens in an attitude of friendship.

We urge all Muslims to work unitedly and unreservedly, to have regard for authority, order and discipline, and to avoid ethnic enmity.

We hope you will appreciate the aims and objects of this association and will extend your fullest co-operation to make this a success.

Wassalam.

Your Brother-in-Islam

A. A. M. Mashood

Moulavi A.A.M. MASHOOD (Bahji)
Chairman.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

№ 0101 (1st Page

# ITHTHIHADUL MUSLIMEEN

## ELECTION OF DISTRICT COMMITTEES FOR THE DISTRICT OF

....................................

NAME OF MOSQUE WHERE ELECTION IS HELD: ....................................

DATE & TIME OF ELECTION: .................... FROM: .................... TO: ....................

PRESIDED BY: NAME ....................................

ADDRESS ....................................

NAME OF ELECTED CHAIRMAN: .................... of ....................

.................... SIG: ....................

CHAIRMAN: *Proposed by:* .................... of ....................

.................... SIG: ....................

*Seconded by:* .................... of ....................

.................... SIG: ....................

NAME OF VICE CHAIRMAN ELECTED: .................... of ....................

.................... SIG: ....................

VICE CHAIRMAN: *Proposed by:* .................... of ....................

.................... SIG ....................

*Seconded by:* .................... of ....................

.................... SIG ....................

NAME OF SECRETARY ELECTED: .................... of ....................

.................... SIG: ....................

SECRETARY: *Proposed by:* .................... of ....................

.................... SIG: ....................

*Seconded by:* .................... of ....................

.................... SIG: ....................

NAME OF ASST. SECRETARY ELECTED: .................... of ....................

.................... SIG: ....................

ASST. SECRETARY: *Proposed by:* .................... of ....................

.................... SIG: ....................

*Seconded by:* .................... of ....................

.................... SIG: ....................

NAME OF TREASURER ELECTED: .................... of ....................

.................... SIG: ....................

TREASURER: *Proposed by:* .................... of ....................

بسم الله الرحمن الرحيم

# Iththihadul Muslimeen

**Organisation to promote Amity and Unity**


ඉත්තිහාදුල් මුස්ලිමීන්
இத்திஹாதுல் முஸ்லிமீன்

Propaganda Secretary (Res.)
☎ 550410

اتحاد المسلمين

JUMMA MOSQUE 87, CHATHAM STREET, FORT, COLOMBO 1. SRI LANKA


Your Ref :

Our Ref :

........................................................19......

வெளியீடு இலக்கம் 1

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# இத்திஹாதுல் முஸ்லிமீன்

அறிக்கை

மனித சமுதாயம் ஒற்றுமையின் மூலமே வளர முடியும். இஸ்லாம் ஒற்றுமையை வலியுறுத்தும் மிகச் சிறந்த ஒரு வாழ்க்கை முறை. ஆயினும் பல்வேறு காரணங்களால் இஸ்லாத்தை வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொண்டுள்ள இன்றைய முஸ்லிம்களிடையே வேற்றுமையும், பிளவுகளும் மலிந்து காணப்படுகின்றன. இது, முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி மனித சமுதாயம் முழுவதற்குமே தீமை பயப்பதாகும்.

இன்றைய உலகப்போக்கை அவதானிக்கும்போது இஸ்லாத்தின் பற்றுதலும், ஒற்றுமையும் முன்பைவிட பன்மடங்கு தேவைப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இலங்கையின் நிலையும் இதுதான். எனவே, இதுபற்றிய உரையாடலொன்று கடந்த 14-8-83 அன்று கொழும்பில் நடைபெற்றது. சமூக அக்கறைகொண்ட உலமாக்கள் பலரும், சமூக சேவையில் ஈடுபாடுடைய இயக்கங்கள் பலவற்றின் பிரதிநிதிகள் பலரும் அதிற் கலந்துகொண்டார்கள். முஸ்லிம்கள் தமது பிரச்சினைகளை இஸ்லாம் காட்டும் வழியில் தீர்த்துக்கொள்வதே சிறந்ததும், பயனுடையதும், அமைதிக்கு வழியென்பதும் அவர்களால் வலியுறுத்தப்பட்டன. இதற்காக ஒரு தாபனம் தேவையென்பதும் அன்று உணர்த்தப்பட்டது.

23-08-83ல் இது தொடர்பாக மேலும் விரிவாக ஆராயப்பட்டு இத்திஹாதுல் முஸ்லிமீன் எனும் இவ்வியக்கம் தாபிக்கப்பட்டது. இதன் தலைவராக மௌலவி ஏ. எ. எம். மஸ்ஊத் ஆலிம் அவர்களும் இணைச்செயலாளர்களாக மௌலவி எம். ஜே. எம். நியாஸ், மௌலவி ஏ. எல். எம். இப்ராஹீம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டதோடு ஷூறா உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். தொடர்ந்து இயக்கத்துக்கான சட்டதிட்டங்களும் அமைக்கப்பட்டன. (அநுபந்தம் – 1 பார்க்க)

'இத்திஹாத்' - என்பதன் பொருள் ஒன்றுபடல் – ஒன்றியம் என்பனவாகும். இவ்வியக்கம் எப்பொழுதும் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் வழிவகுக்குமேயன்றி, வேற்றுமைக்கும், பிரிவினைக்கும் எவ்வகையிலும் இடங்கொடாது. எனவே, இவ்வியக்கத்தின் நோக்கத்தை நிறைவேற்ற விரும்பும் எந்த இயக்கமும் இதிற் பங்கு கொண்டு செயற்படலாம்.

## சேவையின் முதற்கட்டம்

இத்திஹாதின் முதற்பணி, அதனை முஸ்லிம் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துவதாகவும், முஸ்லிம்களிடையே ஒற்றுமையை வலியுறுத்துவதாகவுமே அமைந்தது. இதற்காக இலங்கையில் 24 நிருவாக மாவட்டங்களையும் உள்ளடக்கி பல இடங்களில் ஷூறு உறுப்பினர்களால் 25 கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. முஸ்லிம்களின் வாழ்க்கை, மஸ்ஜித்களை மையமாகக்கொண்டு இயக்கப்பட வேண்டுமென்ற இஸ்லாத்தின் அடிப்படையில் எமது கூட்டங்கள் மஸ்ஜித்களிலேயே நடத்தப்பட்டதோடு கூட்டங்களுக்கு மஸ்ஜித் பரிபாலகர்களும் கதீப்மார்களும் முக்கிய பிரமுகர்களுமே அழைக்கப்பட்டனர். (அநுபந்தம் – 2 பார்க்க)

## ஊக்கமும் ஆக்கமும்

இக்கருத்தரங்குகளில் கலந்துகொண்ட பெரியார்களும், பிரமுகர்களும், அறிஞர்களும் இத்திஹாதின் முயற்சிகளைப் பாராட்டியதோடு இத்திஹாதுடன் ஒத்துழைப்பதாகவும் வாக்குறுதியளித்தார்கள். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் எம்மை ஊக்குவித்துக் கடிதம் எழுதியுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இக்கருத்தரங்குகளின்போது நாட்டில் பரந்து வாழ்கின்ற முஸ்லிம்கள், தாம் அனுபவிக்கும் கல்வி, சமயம், பொருளாதாரம், சமூகம் தொடர்பான பல பிரச்சினைகளை எமது கவனத்துக்குக் கொண்டுவந்தனர். அவற்றுள் சில வருமாறு:

1. குர்ஆன் மத்ரஸா, மஸ்ஜித் போன்றவற்றைக் கட்டவும், நிருவகிக்கவும் போதிய வசதியின்மை.
2. பாடசாலைகள் இல்லாமை.
3. பாடசாலைகளிருந்தும், போதிய ஆசிரியர்கள், தளபாடங்கள், உபகரணங்கள் இல்லாமை.
4. பிற சமய (த்தவர்களின்) பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்க்க இயலாமை.
5. தொழில் வாய்ப்பின்மை.
6. விவசாயம் போன்றவற்றிற்கு நிலமும், நீரும் இல்லாமை.
7. அரசாங்கம் விநியோகிக்கும் பொருட்களையும், பிறவற்றையும் நியாயமாகப் பெற்றுக்கொள்வதில் உள்ள தடைகள்.
8. குடியேற்ற முயற்சியால் சமய, கலாசாரக் கட்டுக்கோப்பு பாதிக்கப்பட்டுள்ளமை.

9. சில அரச ஊழியர்களின் பொறுப்பற்றபோக்கும், ஒருதலை பட்சமான நடவடிக்கைகளும்.

10. குறுகிய நோக்கங்கொண்ட சில விஷமிகளின் பேச்சுக்களாலும் எழுக்களாலும் மனங்குழம்பியிருக்கின்றமை.

11. சுய நலமிகள் சிலரின் துண்டுப்பிரசுரங்களும், வெளியீடுகளும் தோற்றுவித்துள்ள அமைதியின்மை.

12. உண்மைக்கு மாறான தகவல்களால் ஏற்பட்டுள்ள பீதி.

## விபரத்திரட்டு

நமது சமூகத்தில் எத்தனையோ இயக்கங்கள் இருந்துங்கூட எந்தத் தாபனத்திடமும் எம்மைப்பற்றிய தெளிவான புள்ளிவிபரங்களில்லை. இதுபற்றி விரிவான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. சமூகத்தின் இப்பெருங்குறைபாட்டை நீக்க, முதற்கட்டமாக, முஸ்லிம்கள் வாழுமிடங்களிலுள்ள பள்ளிவாசல் ஜமாஅத்தார் பற்றிய முக்கிய விபரத்திரட்டு எனும் பெயரில் ஒரு பத்திரத்தை ஜும்ஆப் பள்ளி நிருவாகிகளுக்கு விநியோகித்து அவற்றை நிரப்பியனுப்பும்படி கேட்டுள்ளோம். எமது, மாவட்டச் சுற்றின்போது அநேகமாக எல்லா ஜும்ஆ மஸ்ஜித்களுக்கும் இப்பத்திரங்கள் கொடுக்கப்பட்டன. அவற்றுள் அநேக மஸ்ஜித்கள் தமது பத்திரங்களை அனுப்பிவைத்துள்ளன. (அநுபந்தம் - 3 பார்க்க) ஏனைய மஸ்ஜிதுகளும் விரைவாக அவற்றை அனுப்பிவைத்தால் எமது நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தலாம். விபரத்திரட்டு கிடைக்காதவர்கள் அதை எம்மிடமிருந்து தபாலில் பெற்றுக்கொள்ளலாம்.

### இத்திஹாதின் அமைப்புமுறை

ஊர் ஜமாஅத்தார்

↓

ஜும்ஆ மஸ்ஜித் பரிபாலகர் சபை

↓

மாவட்ட சபை

↓

மத்திய சபை

↓

மஜ்லிஸுஷ்ஷூரு

அமீர்

ஜும்ஆ மஸ்ஜித், மாவட்டசபை மத்தியசபை, ஆகிய மூன்றிலும் பின்வரும் விவரங்களுக்கான குழுக்கள் அமைக்கப்படும்.

1. ஆராய்ச்சியும், திட்டமிடலும்
2. பாதுகாப்பும், சமூக உறவும்
3. கல்வியும், கலாசாரமும்
4. சமூகசேவை
5. ஸக்காத்தும் பொருளியல் விருத்தியும்
6. நீதியும் கட்டுப்பாடும்

## எதிர்கால வேலைத்திட்டம்

இத்திஹாதின் சட்டதிட்டங்களுக்கமைய பின்வரும் முயற்சிகளில் ஈடுபட இத்திஹாத் திட்டமிட்டுள்ளது.

1. மாவட்ட சபைகளை நிறுவி அவை செயற்பட ஆவனசெய்தல்
2. முஸ்லிம்கள், தத்தம் பிரதேச ஜும்ஆ மஸ்ஜித்களை மையமாகக் கொண்டு ஜமா—அத் அடிப்படையில் தங்கள் தேவைகளையும், பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்ள ஆவனசெய்தல்.
3. எல்லா ஊர்களிலும் ஸகாத்தை முறையாக வசூலித்து, விநியோகிக்கவும் பொருளாதார விவகாரங்களைத் தீர்க்கவும் வழிவகை காணல்.
4. எல்லாத்தேவைகளுக்கும் அரசாங்கத்தையே எதிர்பார்க்காமல் கூட்டுமுயற்சி, சிரமதானம் முதலான வழிகளில் மக்களை ஊக்குவித்தல்.
5. சமூக நலன்களைப் பாதிக்கும் காரியங்களை அகற்றுவதில் ஈடுபடல்

## இத்திஹாத் வெற்றிபெற - செய்யவேண்டியவை

1. இத்திஹாத் ஒற்றுமையை விரும்புகிறது; வேற்றுமையை வெறுக்கிறது. நாட்டுமக்களுக்கு நன்மைசெய்யவே அது அமைக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்துகொள்ளல்.
2. ஒவ்வொருவரும், தத்தம் ஜும்ஆ மஸ்ஜிதுகளுக்கூடாக இத்திஹாதின் அங்கத்தவராகிறார் என்பதை உணர்ந்து தம்மை ஜும்ஆ மஸ்ஜித் ஒன்றில் அங்கத்தவராகப் பதிந்துகொள்ளல்.
3. ஒவ்வொருவரும் தத்தமது ஜமாஅத்தினூடாகவோ, நேரடியாகவோ கிடைக்கும் ஆலோசனைகளுக்கேற்ப இத்திஹாதின் சமூகசேவைத்திட்டங்களில் இயன்றளவு பங்குகொள்ளல்.
4. சமூக நலனைக்கெடுக்கும் எவ்விவகாரத்திலேனும் தம்மை தொடர்புறுத்திக் கொள்ளாதிருப்பதுடன், அத்தகைய செயல்களில் எவரேனும் ஈடுபட்டால் அதுபற்றி உடனே இத்திஹாநுக்கு அறிவித்தல்.

5. தமக்குள் எழும் பிரச்சினைகளை தமக்குள்ளேயோ, மஸ்ஜித்கள் மூலமாகவோ தீர்த்துக்கொள்ள தம்மால் இயன்ற ஒத்துழைப்பை வழங்குவதன்மூலம் சமூகத்துக்கும், நாட்டுக்கும், அரசுக்கும் உதவல்.

6. கட்சி, அரசியல், பதவிமோகம், வரட்டுகௌரவம் போன்றவற்றைவிட இஸ்லாத்துக்கு முதலிடம் கொடுக்கும் மனப்பான்மையோடு எல்லாப் பிரச்சினைகளையும் அணுகுதல்.

இவ்வண்ணம்,

மௌலவி. ஏ. எல். எம். இப்ராஹிம்

மௌலவி. எம். ஜே. எம். றியாழ்

(இணைச்செயலாளர்கள்)

இத்திஹாதுல் முஸ்லிமீன்

87, சதாம் வீதி,

கோட்டை, கொழும்பு-1.

ஹி. 1404, ஜுமாதுஸ்ஸானி. 17.

21 மார்ச் 1984.

அநுபந்தம் - 1

# அமைப்புச் சட்டம்

## அத்தியாயம் - 1, பெயரும், இலட்சியங்களும்

1. 1. பெயர்: இவ்வியக்கத்தின் பெயர், 'இத்திஹாதுல் முஸ்லிமீன்' என்பதாகும். இப்பெயர் சுருக்கமாக 'அல் - இத்திஹாத்' என்று குறிப்பிடப்படும்.

1. 2. முகவரி: 87, சதாம் வீதி, கோட்டை, கொழும்பு-1 என்ற முகவரியில் இது இயங்கும்.

1. 3. ''நன்மையான விடயங்களிலும், அல்லாஹ்வுக்கு வழிபட்டு நடக்கும் காரியங்களிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்துகொள்ளுங்கள். பாவத்துக்கும், அக்கிரமத்துக்கும் நீங்கள் ஒருவருக்கொ வர் உதவியாக இருக்கவேண்டாம். அல்லாஹ்வுக்கே நீங்கள் பயப்படுங்கள். நிச்சயமா அல்லாஹ் தண்டிப்பதில் கடினமானவன் (அல்குர்ஆன் 5:2)

1. 4. இலட்சியங்கள்: இவ்வியக்கத்தின் பொதுவான இலட்சியங்கள் வருமாறு:

அ) முஸ்லிம்களுக்கு மத்தியிலுள்ள வேற்றுமைகளையும், பிளவுகளையும் களைந்தெறிவதற்கான வழிவகைகளைச் செய்தல்.

ஆ) வாழ்க்கையின் சகலதுறைகளிலும் முஸ்லிம்களின் நிலையை விருத்திசெய்ய நடவடிக்கை எடுத்தல்.

இ) பல இன மக்களிடையேயும் ஐக்கியத்தை ஏற்படுத்த முயலல்.

ஈ) மேலே கூறப்பட்ட இலட்சியங்களை அடைவதற்குத் துணைபுரியும் திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்தல்.

## அத்தியாயம் - 2, அங்கத்துவமும், தலைமைகளும்

2. 1. அங்கத்துவம்: அல் இத்திஹாத் மூவகை அங்கத்துவங்களை உடையது.

அ) ஸ்தாபக இயக்கங்கள்.

ஆ) அல்-இத்திஹாதின் இலட்சியங்களையொத்த இலட்சியங்களை உடைய முஸ்லிம் இயக்கங்கள்.

இ) ஜும்ஆப் பள்ளிவாசல்களின் கதீப்களும், பரிபாலகர்களும்.

2. 2. அங்கத்துவ விண்ணப்பம்: அங்கத்துவ விண்ணப்பங்கள் யாவும் அதற்கென்று தயாரிக்கப்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பிக்கப்பட்டு அல்-இத்திஹாதின் அங்கத்தவர் இருவரால் பிரேரிக்கப்பட்டு, ஆமோதிக்கப்பட்டு செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

2. 3. அங்கத்துவத்தை இடைநிறுத்தம் செய்தல்:

அல்-இத்திஹாதின் இலட்சியத்துக்கு மாறுபட்ட பணிகளில் ஈடுபடுவதாகக் கருதப்படும் எந்த இயக்கத்தினதும் அங்கத்துவத்தை இடைநிறுத்தம் செய்யவோ, அல்லது இரத்துச்செய்யவோ அஷ்ஷூரு (செயற்குழு)வுக்கு அதிகாரமுண்டு.

## அத்தியாயம் - 3, அஷ்ஷூரு (செயற்குழு)

3. 1. அஷ்ஷூரு பொறுப்புகள்: அல்-இத்திஹாதின் கொள்கைகளை வகுத்தல், அதன் செயற்றிட்டங்களை தீர்மானித்தல், அவற்றை நடைமுறைப்படுத்தி எதிர்பார்க்கப்படும்

பயன்காண முயற்சித்தல் என்பன, அஷ்ஷூறாவின் பொறுப்புகளில் உள்ளனவாகும். அல்-இத்திஹாதின் உடமைகளைப் பாதுகாக்கும்பொறுப்பும் அஷ்ஷூறா வைச்சார்ந்தது.

3. 2. உறுப்பினர்:

3. 2. 1. அஷ்ஷூறா உறுப்பினர் தொகை பற்றிய முடிவு வருடாந்த பொதுக்கூட்டத்தின்போது அங்கத்தவர்களால் தீர்மானிக்கப்படும்.

3. 2. 2. அஷ்ஷூறா உறுப்பினர் தொகையில் $\frac{2}{3}$ பங்கினர் அல்-இத்திஹாதின் வருடாந்த கூட்டத்தில் அதன் ஸ்தாபக உறுப்பினர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட வேண்டும்.

3. 2. 3. இவ்வாறு தெரிவுசெய்யப்படும் அஷ்ஷூறாவின் $\frac{2}{3}$ பங்கு உறுப்பினர்கூடி அஷ்ஷூறாவின் எஞ்சிய $\frac{1}{3}$ பங்கு உறுப்பினரை நியமனம் செய்யவேண்டும்.

## அத்தியாயம் - 4, பொதுச்சபை

4. 1. அல்-இத்திஹாதின் பொதுச்சபை அதன் ஸ்தாபக இயக்கங்கள், அங்கத்துவ இயக்கங்கள், அல்-இத்திஹாதில் அங்கம் வகிக்கும் ஜூம்ஆப் பள்ளி கதீப்மார், பரிபாலனசபை என்பவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டதாக அமையும்.

4. 2. மஜ்லிஸுஷ்ஷூறா தீர்மானிப்பதற்கேற்ப பொதுச்சபை வருடாந்தக் கூட்டங்களையும், வேறு கூட்டங்களையும் நடத்தும்.

4. 3. இவ்வித கூட்டங்கள் யாவும் இத்திஹாத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

## அத்தியாயம் - 5, பொதுச்சபையின் தொழிற்பாடு

5. 1. மஜ்லிஸ் - அஷ்ஷூறாவுக்கான $\frac{2}{3}$ பங்கு உறுப்பினரைத் தெரிவுசெய்தல்.

5. 2. அல்-இத்திஹாதின் நடவடிக்கைகள் பற்றி ஆராய்தல். எதிர்கால வேலைத்திட்டங்களை விதந்துரைத்தல்.

## அத்தியாயம் - 6, உத்தியோகத்தர்கள்

6. 1. மஜ்லிஸுஷ்ஷூரா, ஒரு தலைவரையும் செயலாளர் ஒருவரை அல்லது இணைச்செயலாளர்கள் இருவரையும் பொருளாளரையும் மஜ்லிஸுஷ்ஷூரா தீர்மானிக்கும் ஏனைய உத்தியோகத்தரையும் தெரிவுசெய்யும்.

## அத்தியாயம் - 7, நிதி

அல்-இத்திஹாதுக்கு பின்வரும் வழிகளில் நிதி பெறப்படும்.

7. 1. அல்-இத்திஹாதின் இலட்சியங்களுக்கு முரணான கட்டுப்பாடுகள் எதுவுமற்ற நன்கொடைகளும், அன்பளிப்புகளும்

7. 2. அல்-இத்திஹாதின் நிதி, மஜ்லிஸுஷ்ஷூராவின் தீர்மானத்திற்கிணங்க பொருளாளராற் செலவு செய்யப்படும்.

## அத்தியாயம் - 8, சட்டத்திருத்தம்

8. 1. இவ்வமைப்புச் சட்டத்துக்கான திருத்தங்கள், அல்-இத்திஹாதின் உறுப்பினர் எவராலும் கொண்டு வரப்படலாம்.

8. 2. அவை பற்றிய முடிவு மஜ்லிஸுஷ்ஷூராவினால் எடுக்கப்படும்.

## அத்தியாயம் - 9, நிறைவெண்

மஜ்லிஸுஷ்ஷூரா கூட்டங்களினதும், பொதுச்சபைக் கூட்டங்களினதும் நிறைவெண், அவை ஒவ்வொன்றினதும் 51% ஆகும்.

## அத்தியாயம் - 10, கலைத்தல்

அல்-இத்திஹாதைக் கலைத்துவிடுவது என்று தீர்மானிக்கப்படும் பட்சத்தில் அதன் நிதி, உடமைகள் யாவும் இஸ்லாமிய சட்டப்படி கையாளப்படுதல் வேண்டும்.

## மாவட்டக் கலந்துறையாடல் நடந்த இடங்கள்

| இல | திகதி | மாவட்டம் | கலந்துரையாடல் நிகழ்ந்த இடம் | பங்குபற்றிய தொகை |
|---|---|---|---|---|
| 1 | 01-10-83 | கேகாலை | கன்னதொட்டை ஜும்ஆப் பள்ளி | 36 |
| 2 | 01-10-83 | கேகாலை | ஹிங்குளோயா ஜும்ஆப் பள்ளி | |
| 3 | 02-10-83 | கண்டி | கம்பளை, டவுன் ஜும்ஆப் பள்ளி | 62 |
| 4 | 02-10-83 | கண்டி | தக்கியா ஜும்ஆப் பள்ளி | |
| 5 | 15-10-83 | புத்தளம் | புத்தளம் பெரிய ஜும்ஆப் பள்ளி | 33 |
| 6 | 16-10-83 | குருநாகல் | குருநாகல் பஸார் ஜும்ஆப் பள்ளி | 93 |
| 7 | 29-10-83 | இரத்தினபுரி | இரத்தினபுரி ஜன்னத்துப் பள்ளி | 21 |
| 8 | 30-10-83 | வதுளை | வதுளை ஜும்ஆப் பள்ளி | 32 |
| 9 | | நுவரெலிய | நாவலபிடி ஜும்ஆப் பள்ளி | — |
| 10 | 12-11-83 | களுத்துறை | ஹிழ்ரு ஜும்ஆப் பள்ளி களுத்துறை | 23 |
| 11 | 12-11-83 | காலி | தலாப்பிடிய ஜும்ஆப் பள்ளி காலி | 15 |
| 12 | 13-11-83 | மாத்தறை அம்பாந்தோட்டை | மாத்தறை, கொட்டுவேகொட ஜும்ஆப் பள்ளி | 20 |
| 13 | 26-11-83 | அநுராதபுரம் | அநுராதபுர, புதிய நகர ஜும்ஆப் பள்ளி | 45 |
| 14 | 26-11-83 | மாத்தளை | டவுன் ஜும்ஆப் பள்ளி மாத்தளை | 35 |
| 15 | 27-11-83 | மன்னார் (வன்னி) | மன்னார் டவுன் பள்ளி | 35 |
| 16 | 27-11-83 | வவுனியா | வவுனியா ஜும்ஆப் பள்ளி | |
| 17 | 28-11-83 | யாழ்ப்பாணம் | முஹியத்தீன் ஜும்ஆப் பள்ளி யாழ்நகர் | 6 |
| 18 | 03-12-83 | பொலநறுவை | கதுருவெல ஜும்ஆப் பள்ளி | 22 |
| 19 | 03-12-83 | மட்டக்களப்பு | வாழைச்சேனை ஜும்ஆப் பள்ளி | 15 |
| 20 | 04-12-83 | கம்பஹ | கொழும்பு-கோட்டை ஜும்ஆப் பள்ளி | 25 |
| 21 | 04-12-83 | அம்பாறை | கல்முனை நகர ஜும்ஆப் பள்ளி | 52 |
| 22 | 05-12-83 | அம்பாறை மொனராகலை | பொத்துவில் ஜும்ஆப் பள்ளி | 56 |
| 23 | 24-12-83 | கொழும்பு (மாநகர சபைக்கு வெளியே) | கொழும்பு-கோட்டை ஜும்ஆப் பள்ளி | |
| 24 | 30-12-83 | திருகோணமலை | மூதூர் ஜும்ஆப் பள்ளி | 31 |
| 25 | 31-12-83 | திருகோணமலை | திருமலை முஹியத்தீன் ஜும்ஆப் பள்ளி | |

## விபரத்திரட்டு அனுப்பிய பள்ளிகள்

1. **கொழும்பு:** அவிசாவளை, புவக்பிட்டிய (02)

2. **கம்பஹா:** கோப்பிவத்த, உடுகொடை, மினுவாங்கொட, கோவின்ன, ரக்ஸபான (மள்வானை), வேவல்தெனிய, அத்தனகல்ல, எல்லலமுல்ல, திஹாரிய (09)

3. **களுத்தறை:** மத்துகம, வெலிப்பன்னை முஸ்லிம் கொலனி, அத்துலுகம, பலாந்த (05)

4. **கண்டி:** பல்கும்புற, வத்தேகம, குருக்குத்தலை, முன்வதுகொடை, ரன்கல்ல, குபுக்கந்துற, பல்லக்கல, தெஹிதெனிய மடிகே, கலகெதர, தென்னகும்புற, தெல்தொட்ட, கஜுகமுவ (கெலி ஓய), ஆண்டியா கடவத்தை, மெதகெகில, பள்ளேகம, உன்னஸ்கிரிய, கிதிகொடை, ஹாமுகங்க, பன்வில, உடதலவின்ன மடிகே, தெஹியங்க, இலுக்வத்த ஹேன்தெனிய (பேராதெனிய), வெலம்பொட, ரம்புக்எல்ல, அங்கும் புற, வலஹெர, என்டருதென்ன (நுகவெல), ஹன்கொல்ல, பன்கொல்லாமட, மாவத்தபொல (31)

5. **மாத்தளை:** அம்பானை, நஹின்கந்த, வெரகலவத்தை (கலேவெல) கந்தே நுவர (தோட்டம்), மாத்தளை நகர், அலுவிஹார, ரஜ்ஜம் மன, கோட்டே கொடை, அலுத்கம, உள்பொத்தபிட்டிய (10)

6. **நுவர-எலிய:** ஹபுகஸ்தலாவ, கொறக் ஓய (குடியேற்றம்), பொல்வதுர, பத்தென (நுவரெலிய) (04)

7. **காலி:** மிலிதுவ, பனுபிட்டிய, ஹாலியெல, மக்குலுவ, காலிக் கோட்டை (05)

8. **மாத்தறை:** மதுராகொடை, மீயெல்ல, கொலேதண்ட, வெலிகம நகர், ஹொரகொடை, கந்தறை (06)

9. **அம்பாந்தோட்டை:** வலஸ்முல்ல, நலகம, பதகிரி, உப்புகிரிந்த, தங்கல்ல (05)

10. **யாழ்ப்பாணம்:** நெய்னாதீவு, சாவகச்சேரி, நாச்சிக்குடா (கிளிநொச்சி) (03)

11. **வன்னி (மன்னார் + வவுனியா) முல்லைத்தீவு:** வண்டக்கண்டல், பீ. பீ. பொற்கேணி, கோணார்பண்ணை, அளவக்கை, மருதோண்டுவான், பிச்சைவாணிப நெடுங்குளம், எலந்தைமோட்டை, கரடிக்குழி, அகத்தி முறிப்பு, மன்னார்சோனகத்தெரு, சூடுவெந்த புலவு, செட்டிக் குளம், புதுக்குளம், உப்புக்குளம், புலிதரித்தபுளியங்குளம், பட்டினிச்சேனை, சாளம்பைக்குளம், மகா இறம்பைக்குளம், சின்ன

சிப்பிக்குளம், ஆனைவிழுந்தான், வேப்பங்குளம், றஸூல் புதுவெளி, தாராபுரம் ஹுஸைனியா, தாராபுரம் மீரானியய்யா, கரிசல், தலைமன்னார், கூழன் குளம், கொண்டச்சி, 4ம் கட்டை பொற்கேணி, மரிச்சுக் கட்டி, விடத்தல் தீவு, அடம்பன் நகர், முல்லைத்தீவு, பேசாலை நூருல் இஸ்லாம், மினுக்கன் *(38)*

12. மட்டக்களப்பு: பூநொச்சிமுனை, பாலமுனை, கிச்சன் பள்ளம், காத்தான்குடி *(04)*

13. திகாமடுல்ல (அம்பாறை): மல்கம்பிடி, பாலமுனை, ஹயாத்துநபி குடியிருப்பு, பசறிச்சேனை, நிந்தாவூர், கோணவத்தை, இஸ்லாம்பாத், மத்திய முகாம்-*1*, இறக்காமம், சவளக்கடை, மத்திய முகாம்-*3*, மத்தியமுகாம்-2, சின்னஉல்ல, கல்முனைக்குடி, வரிப்பத்தாஞ்சேனை (17)

14. திருகோணமலை: முகம்மதலி நகர், கோபாலபுரம், முள்ளிப் பொத்தானை 96வது மைல், பரவிபர்சன், ஸிராஜ் நகர், முள்ளிப் பாஞ்சான்-*8*, பனிச்சம் குளம், வானஎல குடியேற்றம்-*1*, கந்தளாயூற்று, வேப்பந்தவணை, கொய்யாம்புளி, கண்டல்கடு, ஈச்சந் தீவு, பைசல் நகர், இடிமன் 3ம் வட்டாரம், பூவரசந்தீவு, சூனைவெட்டுவான், பொன்னுவரத் தீவு, சம்மாவச்ச தீவு, மஹ்ரூப் நகர், ஆனைச் சேனை, ஜின்னா நகர், பேராற்றுவெளி, பேராறு அணைக்கட்டு வீதி, பேராறு-2, வட்டக்கச்சி, கமால்வத்தை, நிலாவெளி-*1*, நடுஊற்று, பறகத் நகர், சின்ன கிரான் *(31)*

15. குருநாகல்: தல்கஸ்பிடிய (ஜாமிஉல் அஸ்ஹர்), நல்கஸ்பிடிய (அன்ஸார் ஸுன்னத்), றம்புக்கந்துறை, பறகஹதெனிய (ஜாமிஉல் அன்வர்), பூவெல்ல, அலபட கம, ஏதண்டவெவ, பந்தாவ (மடலகம) பானகமுவ (முஹம்மதியா), மாவதகம, அஸனுகொட்டுவ, ஹெட்டிபொல, கொட்டம்பிடிய, அஹட்டுமுல்ல, மடிகே அனுக்கன, திவுரும்பொல, எதுகங்ஹகொட்டுவ, கரம்பாவ, வன்னிக்குடாவெவ, கட்டக் கொடுவ, யானைவிழுந்தான் (தம்புள்ள), வல்பாளுவ, ஹீன்கெதர, மெல்லபொத, வாரியபொல, பம்மன்ன, மஹரகம, கித்தலாவ, குரீகொடுவ, நாப்பா, பறகஹதெனிய (ஜாமிஉத் தவ்ஹீத்), தெலும்புகொல்ல, பானகமுவ (மக்கா மஸ்ஜித்), குருமட, நாரம்மல நகர், நுககஹகெதர, பென்தெனியகொட, ரன்தெனிகம, மட பொகுன, மாய்வல, அபுக்கே கம, வெஹரபெந்த, பொதுஹர (45)

16. புத்தளம்: இஹலகொட்டாரமுல்ல, கொஸ்வத்த, மாணிங்கல, கம்மன்தலுவ, பாலாவி, ஜயபிம (சிலாபம்), புத்தளம் வீதி (சிலாபம்) உடப்பு, புதுக்குடியிருப்பு, தாராக்குடிவில், கடயமோட்டை, புழுதிவயல்(பாலாவி), மூசல்பிடி, கற்பிடி, விருதோடை, நுரைச்சோலை, பள்ளிவாசல் துறை, நல்லந்தழுவ, பெருக்குவட்டன், வட்டக்கண்டல், இலவங்குளம் (புத்தளம்), இலவங்குளம் (17ம் மைல்) (22)

17. அநுராதபுரம்: மஹாசியம்பலகஸ்கட, நிகவெவ, மடாட்டுகம, குடாநெருவாவ, புநுதென்னுவ, தஹரநெக்கவெவ, வெலிகொல்லாவ, கனேவல்பொல, எப்பாவெல, கட்டுகெலியாவ, மிகுந்தலே, கிவுளகட, ஹெரேபொல, கொல்லன்குட்டிகம, மரதன்கடவெல, தள்கஹவெவ, இகிரிகொல்லாவ, கட்டியாவ, ரத்மலீ, நெலுகொல்ல கடே, முக்கிரியாவ, துன்மன்தலாவ, அஸிரிக்கம, அலுத்கம, நொச்சியாகம, சடகொடியாவ, சிராவஸ்திபுர, கழுமீவகட (28)

18. பொலன்னறுவ: பங்குறன, புதுஊர் (காலிங்களல), நுககஹதென்ன, அகிபர் புர, பள்ளிய கொடல்ல, பொதுவெர, சுங்காவில கல்லாவ (குடி-49), தம்பாள (குடி-314), சுங்காவில் (10)

19. பதுளை: கினிகம, ஜங்கொல்ல, வெலிமட, கலஉட, அலுகொல்ல, பண்டாரவளை, கஹகொல்ல, தாஉள்ள, ஹாலி-எல, போகஹகும்புற, மிரஹவத்த, பங்கரகம்மன, வதுளை (2ம் மைல்), வதுளை நகர், லுணுகல, மஹதுவ, உடுவர (17)

20. மொனராகலை: படல்கும்புற, அலுபொத்த, பகினிகஹவெல, கொட புவ, வெல்லவாய (05)

21. இரத்தினபுரி: தளாவிடிய (எஹலியகொட), நபுருவ-1, அஸ்கம்குல, நிவித்திகல, இரத்தினபுரி, மஹவெவ, ஹபுகஸ்தென்ன, றக்வானை, கஹவத்த, ஹோப்பே, ஒப்பநாயக, மொரகல (12)

22. கேகாலை: நெலுந்தெனிய, மடுள்போவ, வரகாபொல, கொடவில, நாங்கல்ல, தெரணியகல, ருவன்வெல்ல, நாப்பாவெல, தெஹியோவிட்ட, கன்னதொட்ட, கராகொட, புளத்கொஹுபிட்டிய, எட்டியாந்தோட்டை (நகர்), வில்பொல, மாவத்தகொட, தும்புளுவாவ, கொட்டேகொட, வாடியதன்ன, ஹிஜ்ராகம, தல்கஸ்பிடிய, கேகாலை, உந்துகொட, ஹெமிங்போர்ட், (23)